# பழைய ஏற்பாடு ஓர் அறிமுகம் (பாடம்-1)

நம்முடைய பரிசுத்த வேதாகமத்தை இரண்டு முக்கிய பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. பழைய ஏற்பாடு
2. புதிய ஏற்பாடு

நாம் பழைய ஏற்பாடு ஓர் அறிமுகம் என்கிற இந்த பாடத்தில் பழைய ஏற்பாட்டின் பிரிவுகளையும், ஒவ்வொரு புத்தகத்தினுடைய முக்கியமான மையக்கருத்துகளையும் கற்றுக்கொள்ள இருக்கின்றோம். முதலில் பரிசுத்த வேதாகமத்தை குறித்ததான அடிப்படையான காரியங்களை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

வேதாகமம் எழுதப்பட்டு நமக்கு கொடுக்கப்பட்டத்தின் நோக்கத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும் (யாத் 17:14, 2 தீமோ 3:16,17)

- தன்னுடைய பரிபூரணமான சித்தம் இன்னதென்று நாம் அறிந்துகொள்வதற்காக பரிசுத்த வேதாகமத்தை தேவன் நமக்கு தந்திருக்கிறார்.
- காலப்போக்கில் வேத வசனங்களின் உண்மை தன்மை பிசகிப்போகாமல் இருப்பதற்காகவும், முழு மனுக்குலமும் வேதாகமத்தின் முழுமையான மகத்துவங்களை கால இடைவெளி இல்லாமல் அறிந்துக் கொள்வதற்காகவும், தம்முடைய பரிசுத்தவான்களை பயன்படுத்தி நம்முடைய தேவன் நமக்கு பரிசுத்த வேதாகமத்தை எழுதி கொடுத்திருக்கிறார்.

அடுத்து, வேதாகமத்திற்கு பைபிள் என்கிற ஆங்கில வார்த்தை எப்படி வந்தது என்று அறிந்துகொள்வோம்.

பாலஸ்தினாவுக்கு வடக்கேயுள்ளே லெபனான் நாட்டில் கெபால் என்கிற துறைமுக நகரம் இருக்கிறது. பழைய பெனிசியா நாட்டின் தலைசிறந்த துறைமுகமாகவே இந்த கெபால் விளங்கியது. இங்கிருந்து எழுதுவதற்கு பயன்படுத்தக்கூடிய எழுதுகோல்களை தயாரிக்கிற “பாப்பிரஸ்” என்கிற கோரைப்புல் வகையான தாவரம் அநேக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. எங்கேயிருந்து இந்த பாப்பிரஸ் இறக்குமதி செய்தனரோ அந்த நாட்டிற்கு பாப்பிரஸ் என்கிற பெயரிட்டே அழைத்தனர். இந்த பெயர் காலப்போக்கில் “பிப்போஸ்” என்றும் மறுபடி இந்த வார்த்தையிலும் மாற்றம் ஏற்பட்டு “பிப்லோஸ்” என்றும் புத்தகங்களை குறிக்கிற கிரேக்க வார்த்தையாக அழைக்கப்பட்டு வந்தது. இவைகளுக்கு பிறகு புத்தகங்களுக்கும் எல்லாம் சிறந்த புத்தகமாக விளங்கிய வேதாகமத்திற்கு இந்த “பிப்லோஸ்” என்கிற பெயர் வழங்கப்பட்டு, அது காலப்போக்கில் மருவி “பைபிள்” என்கிற பெயரிலே அழைக்கப்பட்டு வருகிறது. “பைபிள்” என்கிற இந்த ஆங்கில பெயர் முறையே லத்தீனில் “பீபிள்” என்றும் இத்தாலியில் “பிபியா” என்றும் பிரெஞ்சில் “பிப்பினா” என்றும் அழைக்கப்பட்டு வருகிறது. நம்முடைய தமிழ்

மொழியில் பரிசுத்த வேதாகமத்திற்கு “மறைநூல்”, “திருமறை” மற்றும் “விவிலியம்” என்கிற பெயர்களும் உண்டு என்பதை அறிந்திருக்கிறோம்.

மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய மகத்துவம் நிறைந்தது தான் நம்முடைய பரிசுத்த வேதாகமம்:-

வேத வசனங்களை வாசித்து, தியானித்து தங்கள் வாழ்க்கையை சீர்ப்படுத்திக் கொண்டவர்களும், சீரழிந்திருந்த தன்னுடைய வாழ்க்கையை வேத வசனங்களினால் சரிபடுத்திக் கொண்டு ஆசீர்வாதமாக வாழ்கிறவர்களைக் குறித்து அநேக சாட்சிகளை நாம் கேட்க முடியும்.

உதாரணத்திற்கு

தனிமனிதனுடைய வாழ்வில் முன்னால் பாரத பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் கொலை வழக்கில் தூக்குதண்டனை கைதியாக சிறையிலிருந்த பால்பீர்சிங் என்பவர் சிறைசாலை அதிகாரி மூலமாக ஒரு வேதாகமத்தை பெற்றுக்கொண்டு வாசித்து வந்தார். வேத வசனம் அவரை தினமும் உயிர்ப்பித்தது என்றும், அவருடைய நினைவுகளெல்லாம் இயேசு கிறிஸ்துவின் மேல் பதிந்தது என்றும் நித்திய வாழ்வின் நம்பிக்கையோடு தான் வாழ்வின் ஓட்டத்தை நிறைவு செய்ததாகவும் அவர் தன்னுடைய வாழ்வு குறிப்பில் குறிப்பிட்டிருந்ததை 1988ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8ம் தேதி “இந்தியன் எக்ஸ்பிரஸில்” வெளிவந்த செய்தியின் மூலம் அறிந்து கொள்கிறோம்.

## தேசத்தில் ஏற்பட்ட மாற்றம்

கம்யூனியஸத்தின் இரும்பு கரங்களால் ஒடுக்கப்பட்டிருந்த ரஷிய தேசத்திற்குள் வேதாகமம் கொண்டு செல்ல முடியாத அளவுக்கு பெரிய தடைகள் இருந்த நாட்களில், தங்களுக்கு கிடைத்த வேதாகமத்தை ஒவ்வொரு தாளாக கிழித்து ஒவ்வொருவரும் மாறி மாறி படித்து, தேவன்மேல் அன்பும், நம்பிக்கையும் வைத்து ஜெபிக்க ஆரம்பித்த போது கம்யூனியஸத்தின் நெருக்குதல்கள் பெருக துவங்கியது என்றும், தேச ஜனங்களுக்குள் எல்லா நிலைமைகளிலும் ஆசீர்வாதங்கள் கடந்து வந்தது என்பதையும் தேச சரித்திர நிகழ்வுகளின் மூலம் அறிகிறோம்.

## தள்ளப்பட்ட ஆகமங்கள்

தள்ளப்பட்ட ஆகமங்கள் என்றால் மறைக்கப்பட்டது, மூடப்பட்டது அல்லது இரகசியமானது என்று பொருளாகும்.

பெயர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 எஸ்ரா | 2 எஸ்ரா | தோபியாஸ் | யூடித் |

| | | | |
|---|---|---|---|
| எஸ்தரின் ஒய்வு | சாலோமோனின் ஞானங்கள் | பிரசங்கிகள் | பாரூத் |
| மூன்று பரிசுத்த எபிரெய குழந்தைகளின் பாடல்கள் | சூசன்னாவின் வரலாறு | பெல்கடவுளும் (பாகாவம்) வலுசர்ப்பமும் | மனாசேயின் ஜெபம் |
| 1,2 மக்கபேயர் | 3,4 மக்கபேயர் | எரேமியாவின் கடிதம் | |

நம்முடைய பரிசுத்த வேதாகமத்தில் இந்த தள்ளப்பட்ட ஆகமங்கள் சேர்க்கப்படாமல் இருப்பதற்கான காரணங்கள்

1. இயேசு கிறிஸ்து தேவன் என்கிற மையக்கருத்து இந்த நிருபங்களில் எங்கும் கூறப்படவில்லை.
2. இயேசு கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் இந்த நிருபங்களிலிருந்து எந்தவொரு வசனங்களையும் மேற்கோளாக எடுத்து கூறவில்லை.
3. எபிரெய வேதாகம பழைய ஏற்பாட்டிலும் இந்த நிருபங்களை யூத தலைவர்கள் சேர்க்கவில்லை.
4. யூத வரலாற்று ஆசிரியர் ‘ஜெசிபஸ்’ என்பவர் தொகுத்து வழங்கிய அட்டவணையிலும் இந்த நிருபங்கள் இடம் பெறவில்லை.
5. தேவனுடைய ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டுள்ளது என்பதற்கான எந்த அடையாளமும் அறிகுறிகளும் இந்த நிருபங்களில் எங்கும் காணப்படவில்லை.
6. யெகோவா தேவனின் செய்திகள் என்று ஒன்றுமே இந்த நிருபங்களில் சொல்லப்படவில்லை.
7. சரித்திரத்திற்கும் வருடங்களுக்கும் நிலவியல் அமைப்பிற்கும் முரண்பட்ட கருத்துக்கள் இந்த நிருபங்களில் காணப்படுகிறது.
8. வேத வசனங்களுக்கு முரண்பட்ட உபதேசங்களும் பழக்கவழக்கங்களும் இந்த நிருபங்களில் காணப்படுகின்றன.
9. வேதாகம மொழிபெயர்ப்பிலும் கிபி 360ல் கூடிய வேதாகம ஆலோசனை சங்கத்திலும் இந்த நிருபங்கள் சேர்க்கப்படவில்லை.
10. நம்முடைய பரிசுத்த வேதாமத்திலுள்ள அறுபத்தாறு (66) புத்தகங்களில் கூறப்பட்டுள்ளவைகளோடு, எந்த ஒரு நிலைகளிலும் இந்த நிருபங்கள் ஒத்துப்போகவேயில்லை.

ஆசிரியர் - மோசே விளக்கம்

மோசே என்றால் ஜலத்திலிருந்து எடுக்கப்பட்டவன் என்று பொருள். லேவி கோத்திரத்தான். மோசேயின் காலங்கள் 120 வயது. மூன்று பிரிவாக அவன் காலங்களைப் பிரிக்கலாம்.

முதல் 40 – பார்வோன் அரண்மனையில் இளவரசனாக

2வது 40 – வனாந்திரத்தில் மேய்ப்பனாக (திருமணம், தேவதரிசனம், சீனாய்மலை)

3வது 40 - இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்திய இரட்சகனாக,

மோசே தான் பஞ்சாகமத்தை எழுதினார் என்பதற்கு ஆதாரம். அப்போஸ்தலர் 7:2-16, 37-38, ஆதியாகமத்தின் வரலாற்று செய்திகள் அடங்கியுள்ளன.

பழைய ஏற்பாட்டின் மொத்த புத்தகங்கள் - 39

முதல் 5 புத்தகங்கள் மோசேயின் ஆகமங்கள் ஆகும்.

## பழைய ஏற்பாட்டின் பிரிவுகள்

1. மோசேயின் ஆகமங்கள் : ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் - 5. இதை பஞ்சாகமம் (Pentateuch) என்றும் குறிக்கலாம்.
2. வரலாற்று நூல்கள் : யோசுவா முதல் எஸ்தர் - வரலாற்று காரியங்கள் சொல்லப்பட்டுள்ளது. (எ.கா) சாலோமோன் - 700 மனைவிகள் 300 மறுமனையாட்டிகள்
3. செய்யுள் நூல்கள் அல்லது கவிதை புஸ்தகங்கள் : யோபு முதல் உன்னதபாட்டு -5
4. பெரிய தீர்க்கதரிசன நூல்கள் : ஏசாயா முதல் தானியேல் - 5 ஏசாயா 66 (OT + NT = 66) Whole Bible
5. சிறிய தீர்க்கதரிசன நூல்கள் : ஓசியா முதல் மல்கியா – 12 (பிரிவு 4+5= தீர்க்கதரிசன நூல்கள்.)

## மோசேயின் ஆகமங்கள்

5 புத்தகங்களும் ஓரே ஆசிரியரால் (மோசே) எழுதப்பட்டதால் பஞ்சாகமம் என குறிப்பிடப்படுகிறது. ஆங்கிலத்தில் "Pentateuch" எனவும், எபிரெயர் மொழியில் "தோரா" என்ற பதத்தால் குறிக்கலாம். இதுவே பழைய ஏற்பாட்டின் காலத்தில் வேதமாக கணக்கிடப்பட்டு வந்தது. சதுசேயர் மற்றும் யூதர்கள் இதையே முக்கியமான சத்தியமாகக் கைக்கொண்டனர்.

ஆதியாகமம் : ஆதி – அநேக ஆரம்பங்களை உள்ளடக்கியது.

ஆதியாகமம்

- சிருஷ்டிப்பின் ஆரம்பம்
- பாவத்தின் ஆரம்பம்
- இஸ்ரவேல் சந்ததியின் ஆரம்பம்
- பலி செலுத்துதலின் ஆரம்பம்

யாத்திராகமம்

- தேவன் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் மக்களை மீட்டெடுத்தல்
- மோசேயிடம் தேவன் கொடுத்த 10 கட்டளைகள்

லேவியராகமம்

- ஆசாரிப்புக் கூடாரம் பற்றிய காரியங்கள்
- இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு பலி செலுத்தும் காரியங்கள் அடங்கியுள்ளன.

எண்ணாகமம்

- இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திரத்தில் மோசேயால் வழிநடத்தப்படுதல், தேவனுக்கு விரோதமான அவர்களின் முரட்டாட்டம், வனாந்திர யாத்திரையில் (40 வருடங்கள்) அநேகர் தேவ திட்டத்திற்கு ஒப்புக்கொடுக்காமல் மரித்தனர்.

உபாகமம்

- இஸ்ரவேலில் வந்த அடுத்த சந்ததி (தலைமுறை)க்கு மோசே ஆலோசனைகள் வழங்குதல்

கேள்விகள்

1. வேதாகமத்தில் எழுதப்பட்டதின் நோக்கம் என்ன? பரிசுத்த வேதாகமம் எதற்காக நமக்கு தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிறது?
2. பைபிள் என்கிற வார்த்தை எங்கிருந்து, எப்படி வந்தது என்பதை கூறுக?
3. பரிசுத்த வேதாகமம் தனிமனிதனுடைய வாழ்விலும் தேசத்திலும் ஏற்படுத்திய மாற்றங்களைக் குறித்து இப்பாடத்தில் கேட்டு கற்றதிலிருநத்து எழுதுக?
4. பரிசுத்த வேதாகமம் எவ்வாறு இருபெரும் பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது என்றும், அதில் முதல் பிரிவான பழைய ஏற்பாட்டை எத்தனை பிரிவுகளாக பிரிக்கலாம் என்றும் விளக்கமாக கூறுக?
5. தள்ளுபடி ஆகமங்களின் பெயர்களையும், அவைகள் வேதாகமத்தில் சேர்க்கப்படாமல் தள்ளப்பட்டதற்கான காரணங்களையும் விளக்கமாக கூறுக?

6. பழைய ஏற்பாட்டின் முதல் பிரிவாகிய ஆகமங்களைப் பற்றியும் இந்த ஆகமங்களின் மையக்கருத்துகளையும் பற்றி இப்பாடத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொண்டவைகளை எழுதுக?